# தயம்முமு

இறைத்தூதர் ﷺ அவர்கள் காலத்து ஒரு நிகழ்வான த்ஜாதுஸ் சலாசில் போர் நிகழ்ந்த சமயத்தில் ஹஜ்ரத் அம்ரு பின் அல்ஃஆஸ் (ர) அவர்களை இறைத்தூதர் ﷺ அவர்கள் முஜாஹிதீன்களுடைய படைத்தலைவராக நியமித்து அனுப்பியிருந்தார்கள். ஹஜ்ரத் அம்ரு பின் அல்ஃஆஸ் (ர) அவர்கள் தன்னுடைய படைகளுடன் சென்றுகொண்டிருந்தார்கள். இரவு நேரமான போதுபடையினர்தூங்கிவிட்டனர். ஹஜ்ரத் அம்ரு பின் அல்ஃஆஸ் (ர) அவர்களுக்கு கனவின் காரணமாகக் குளிப்பு கட்டாயமானதாக ஆகிவிட்டது, ஆனால், கடும் குளிர் காரணமாக அவர்கள் குளிர்ந்த தண்ணீரில் குளிப்பார்களேயானால் மரணம் ஏற்படலாம் என்ற அளவிற்கு அச்சம் ஏற்பட்டது, ஆகவே, அவர்கள் தயம்மும் செய்துகொண்டு தொழுகையை நிறைவேற்றி வைத்தார்கள். திரும்பி வந்தபின்பு மக்கள் இதனைப்பற்றி இறைத்தூதர் ﷺ அவர்களிடம் எடுத்துக்கூறினார்கள். அவர்கள் ﷺ ஹஜ்ரத் அம்ரு பின் அல்ஃஆஸ் (ர) அவர்களை அழைத்துக் கேட்டார்கள், அதற்கு அவர்கள் குளிக்காததற்கான காரணத்தைக் கூறினார்கள். நான் திருக்ஃகுர்ஆன் வசனத்தைப் பார்த்திருக்கின்றேன்:

وَلَا تَقْتُلُوٓا۟ أَنفُسَكُمْ ۚ إِنَّ ٱللَّهَ كَانَ بِكُمْ رَحِيمًا ﴿٢٩﴾ النسا 9!)

*பொருள்: உங்களை நீங்களே மாய்த்துக்கொள்ளவேண்டாம், நிச்சயமாக, அறிந்துகொள்ளுங்கள், அல்லாஹ் உங்கள்மீது அளப்பரிய கருணை புரிபவனாக இருக்கின்றான் (அந்நிசா:29).*

இதனைக்கேட்ட இறைத்தூதர் ﷺ அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள், ஒன்றும் சொல்லவில்லை (அபூ தாவூத்).

**தயம்மும் என்பது தண்ணீர் கிடைக்காமலே இருக்கும் நிலையில் அல்லது தண்ணீர் பயன்படுத்தாமலிருக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாககப்படும் மார்க்க அடிப்படையிலான ஒரு காரணம் இருக்குமானால் அது குளிப்பு மற்றும் உளூவிற்கு இணையான மாற்று ஏற்பாடாகும். அதற்கான காரணங்கள் கீழ்வருமாறு:**

1 **தண்ணீர் எங்குமே கிடைக்காமலிருத்தல்**

2 **உணவு சமைக்க மற்றும் குடிப்பதற்குப் போதுமான அளவிற்கு மட்டுமே தண்ணீர் பெறப்படுதல்**

3 **ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்து அவருக்குத் தண்ணீர் பயன்படுத்துவது நோய் அதிகமாவதற்குக் காரணமானதாக ஆகிவிடும் என அஞ்சப்படுதல்**

4 **தண்ணீர் இருந்தும் அது பயன்படுத்தப்பட்டால் தீங்கோ அல்லது மரணமோ ஏற்பட்டுவிடும் அளவிற்குக் கடுமையாகக் குளிர்ந்ததாக இருத்தல்**

www.uzairfalahi.com

5 **தண்ணீருக்காகக் காத்திருந்தாலோ அல்லது அதனைத் தேடிச்சென்றாலோ தொழுகையே விடுபட்டுவிடும் என்ற அச்சம் இருந்தால்**

### தயம்மும் எவ்வாறு செய்யவேண்டும்?

ஹஜ்ரத் அம்மார் பின் யாஸிர் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், ஒரு முறை ஜனாபத் காரணமாக எனக்குக் குளிப்பு கட்டாயமானதாக ஆகிவிட்டது, என்னிடத்தில் தண்ணீர் இருக்கவில்லை. நான் தரையில் உருண்டு உருண்டு சென்றேன் அதன்பின், தொழுகையையும் நிறைவேற்றினேன். பிறகு, நான் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் அதனைப்பற்றி எடுத்துக்கூறினேன், அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள், உங்களுக்கு அதுவே போதுமானது. அதன்பின் இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய கைகளைத் தரையின் மீது அடித்தார்கள் அதன்பின் அவற்றின்மீது ஊதினார்கள், தன்னுடைய இரு உள்ளங் கைகளையும் கொண்டு தன்னுடைய முகம் மற்றும் இரண்டு கைகளின் மிதும் தடவிக்கொண்டார்கள் (புக்ஹாரி, முஸ்லிம்)

### தயம்மும் செய்வதில் கட்டாயமானவை (ஃபர்ஜ்தானவை)

1 **நிய்யத்**

2 **முகம் மற்றும் கைகளின்மீது மசஹ் செய்தல் (தடவிக்கொள்ளுதல்)**

3 **வரிசை முறையில் அதாவது முதலில் முகம், அதன்பின் கைகளின்மீது மசஹ் செய்தல்**

4 **தொடர்ந்து செய்தல், அதாவது முகம் மற்றும் கைகளின்மீது மசஹ் செய்வதில் இடைவெளி விட்டுத் தாமதிக்கக்கூடாது**

5 **மணல் சுத்தமானதாக இருத்தல்**

### தயம்மும் செய்வதில் சுன்னத்தானவை

1 **பிஸ்மில்லாஹ் சொல்லுதல்**

2 **கைகளை மண்ணின் மீது தடவுதல்**

3 **விரல்களுக்கிடையே மணல் படியும் வகையில் விரல்களை விரித்தல்**

4 **ஃகிப்லாவை நோக்கி தயம்மும் செய்தல் (சில அறிஞர்களின் கருத்து)**

5 **தண்ணீர் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் சற்று தாமதித்தல்**

### தயம்மும் செய்வதில் மக்ரூஹானவை (விரும்பத்தகாதவை)

1 **மசஹ் செய்வதில் திரும்பத்திரும்பச் செய்தல்**

2 **மூக்கு மற்றும் வாய்க்குள் மண் செலுத்துதல்**

www.uzairfalahi.com

3 **சுன்னத்தானவற்றைச் செய்யாதிருத்தல்**

### தயம்மும் செய்தபின் அதனை முறிப்பவை

1 **எதனால் உழூ மற்றும் குளிப்பு முறிந்துவிடுகின்றதோ அதே காரணங்களினால் தயம்மும்கூட முறிந்துவிடும்**

2 **தண்ணீர் கிடைத்துவிட்டால்** ஹஜ்ரத் அபூ சயீத் க்ஹுத்ரி(ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இரண்டு நபர்கள் பயணம் செய்துகொண்டிருந்தார்கள், அவர்களிடத்தில் தண்ணீர் இருக்கவில்லை, அவர்கள் தயம்மும் செய்து கொண்டு தொழுகையை நிறைவேற்றினார்கள். தொழுகைக்கான நேரம் முடிந்துவிடுதவற்கு முன்பாகவே அவர்களுக்குத் தண்ணீர் கிடைத்துவிட்டது. அவர்களில் ஒருவர் தொழுகையை மீண்டும் நிறைவேற்றினார், மற்றவர் அதனை மீண்டும் நிறைவேற்றவில்லை. அவர்கள் திரும்பிச்சென்றபின் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் அதனைப்பற்றி எடுத்துக்கூறினார்கள். எவர் தொழுகையை இரண்டாவதாக மீண்டும் நிறைவேற்றவில்லையோ அவரை நோக்கி இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நீர் சுன்னத்தான முறையினையே கடைபிடித்துள்ளீர், உம்முடைய தொழுகை நிறைவேறிவிட்டது. தொழுகையை மீண்டும் இரண்டாவதாக நிறைவேற்றியவரைப்பார்த்துக் கூறினார்கள், உங்களுக்கு இருமடங்கு நற்பலன் கிடைக்கும். (அபு தாவூத், நசாயி). தொழுகை நிறைவேற்றிக்கொண்டிருக்கும்போது தண்ணீர் கிடைத்துவிடுமானால், அத்தொழுகைக்கான நேரமும் இருக்கும் நிலையில், தொழுகையை முறித்துவிட்டு, உழூ செய்து மீண்டும் தொழுகையை நிறைவேற்றவேண்டும், ஏனெனில், தண்ணீர் கிடைத்துவிட்டால் தயம்மும் தாமாகவே முறிந்துவிடும்.

3 **தயம்மும் செய்வதற்கான காரணம் நீங்கிவிடும் நிலையில், உதாரணமாக, தண்ணீர் கிடைத்துவிட்டால் அல்லது நோய் ஒரு காரணமாக இருந்து அதிலிருந்து நிவாரணம் பெற்றுவிட்டால்**

4 **குளிப்பு கட்டாயமானதாக ஆக்கும் காரணம் மீண்டும் ஏற்பட்டுவிட்டால்**

* * *